# ரெக்ஸ்



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com




# உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com

# டைனோசர்
## (Dinosaur)

டைனோசர்கள் சுமார் 245 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு பூமியில் வாழ்ந்த ஊர்வனவற்றின் ஒரு குழுவாகும். "டைனோசர்" என்ற வார்த்தை கிரேக்க வார்த்தைகளான "டீனோஸ்" (பயங்கரமான அல்லது பெரிய) மற்றும் "சௌரோஸ்" (பல்லி) ஆகியவற்றிலிருந்து உருவானது. பூமியில் வாழ்ந்த மிகப்பெரிய டைனோசர் அர்ஜெண்டோசரஸ். இதன் எடை சுமார் 70 டன் முதல் 80 டன் வரை இருக்கும். இதன் நீளம் 100 முதல் 130 அடி வரை இருக்கும்.


www.worldtamilacademy.com

ஓர் அழகிய மாலை நேரம். கதிரவனின் பொன்நிறக் கதிர்கள் பூமியின் மீது படர்ந்திருக்க, மித்ரா தோட்டத்தில் அக்காவுடன் விளையாடிக் கொண்டிருந்தாள். திடீரென அவளுக்கு முன்னால் ஒரு பிரம்மாண்டமான டைனோசர் தோன்றியது. அது ஒரு டைரனோசரஸ் ரெக்ஸ்!



ரெக்ஸ்: (மெல்லிய, ஆனால் கம்பீரமான குரலில்) ஹலோ மித்ரா! என் பெயர் ரெக்ஸ். நீ என்னைப் பார்த்ததில் ஆச்சரியமாக இருக்கிறதா?

மித்ரா: கண்களை அகல விரித்து, ஆச்சரியத்தில் உறைந்துபோய் ஆ.. ஆமாம்! நீ நிஜமான டைனோசரா? உன்னை நான் புத்தகங்களில் மட்டுமே பார்த்திருக்கிறேன்!



ரெக்ஸ்: (சிரித்துக்கொண்டே) உண்மைதான். நான் ஒரு காலத்தில் இந்தப் பூமியின் ராஜா! பல கோடி ஆண்டுகளுக்கு முன்பு, நாங்கள் இங்கு வாழ்ந்தோம். நீ மட்டுமல்ல மனிதர்கள் தோன்றுவதற்கு முன்னாலே எங்கள் இனம் தோன்றி அழிந்து விட்டது.



www.worldtamilacademy.com

ரெக்ஸ்: நாங்கள் மூன்று வெவ்வேறு காலகட்டங்களில் வாழ்ந்தோம். முதலில் ட்ரையாசிக் காலம்(triassic period), பிறகு ஜுராசிக் காலம்(jurassic period), கிரெட்டேசியஸ் காலம்(cretaceous period).



## ட்ரையாசிக்

(252 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு)



## ஜுராசிக்


(201 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு)



## கிரெட்டேசியஸ்

(145 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு)

மித்ரா: சரி நீங்க மட்டும் தான் இருக்கிங்களா?



வெலோசிராப்டர்



ஆலோசரஸ்

ரெக்ஸ்: இல்லை மித்ரா! என்னைப் போன்று நிறைய இருக்கின்றன. அவற்றைப் பற்றிக் கூறுகிறேன். கேள் வெலோசிராப்டர், (velociraptor) ஆலோசரஸ் (allosaurus) டைரனோசரஸ் ரெக்ஸ், (tyrannosaurus rex - t. rex) ஸ்பினோசரஸ் (spinosaurus) இவைகள் எல்லாம் மாமிச உண்ணிகள் (carnivores) மற்ற விலங்குகளை வேட்டையாடி உண்ணும் திறன் கொண்டது.



www.worldtamilacademy.com







- வெலோசிராப்டர்: சிறிய, வேகமாக ஓடக்கூடிய மாமிச உண்ணி.
- ஆலோசரஸ்: கண்களுக்கு மேல் சிறிய, தனித்துவமான எலும்புப் புடைப்புகள் (குறைந்த உயரம் கொண்ட கொம்புகள் போல) இருக்கும்.
- டைரனோசரஸ் ரெக்ஸ்: மிகப்பெரிய மாமிச உண்ணி டைனோசர்களில் ஒன்று.
- ஸ்பினோசரஸ்: மீன்களைப் பிடித்தும், மற்ற விலங்குகளை வேட்டையாடியும் வாழ்ந்த ஒரு பெரிய டைனோசர், அதன் முதுகில் ஒரு படகோட்டியின் பாய்மரத்தைப் போன்ற அமைப்பு இருக்கும். நீரில் நீந்தும் அமைப்பையும் கொண்டது.

ஆர்ஜெண்டோசரஸ் (argentinosaurus), பிராக்கியோசரஸ், (brachiosaurus) ஸ்டெகோசரஸ் (stegosaurus) ட்ரைசெரடாப்ஸ் (triceratops) அபாடோசரஸ் (apatosaurus) இவைகள் எல்லாம் தாவர உண்ணிகள் பெரிய உடலுடன், நீண்ட கழுத்துடன் இருக்கும். இவை தாவரங்களை மட்டுமே உண்ணும்.




ஆர்ஜெண்டோசரஸ்



பிராக்கியோசரஸ்



ஸ்டெகோசரஸ்



ட்ரைசெரடாப்ஸ்



அபாடோசரஸ்

- அர்ஜென்டினோசரஸ்: இதுவரை கண்டறியப்பட்ட மிகப்பெரிய டைனோசர்களில் ஒன்று. நீண்ட கழுத்து மற்றும் வால் கொண்டது.
- பிராக்கியோசரஸ்: முன்னங்கால்கள் பின்னங்கால்களை விட நீளமாக இருக்கும். மிகவும் நீண்ட கழுத்து கொண்டிருக்கும். இது உயரமான மரங்களிலிருந்து இலைகளை உண்ண உதவியாக இருக்கும்.
- ஸ்டெகோசரஸ்: முதுகில் முக்கோண வடிவத் தகடுகளையும், வாலில் கூர்மையான முட்களையும் கொண்டது.
- ட்ரைசெரடாப்ஸ்: தலையில் மூன்று கொம்புகள் மற்றும் கழுத்தைச் சுற்றிலும் ஒரு பெரிய எலும்புத் தகடு இருக்கும்.
- அபாடோசரஸ்: மிகப் பெரிய உடலும், நீண்ட கழுத்தும், மிகவும் நீளமான, சாட்டை போன்ற வாலும் (whiplash tail) கொண்டிருக்கும்.



ப்டெரோசோர் (pterosaur) பறக்கும் ஊர்வன, ஆனால் டைனோசர் காலத்தில் வாழ்ந்ததால் இதனை டைனோசர் என்று கூறுகின்றன.

இச்சியோத்ஸார் (ichthyosaur) கடலில் வாழ்ந்த ஊர்வன. இது மீன்களைப் போலத் தோற்றமுடையது, ஆனால் டைனோசர் அல்ல.





ப்டெரோசோர்

இச்சியோத்ஸார்

டைனோசர்கள் நான்கு கால்கள் அல்லது இரண்டு கால்களில் நடக்கும் திறன் கொண்டது.



மித்ரா: உங்களை மீண்டும் பார்க்க முடியாதா?

ரெக்ஸ்: முடியாது மித்ரா

மித்ரா: ஏன்? ஏன் முடியாது?

ரெக்ஸ்: ஹாஹா, என் காலடிச் சத்தமே உன்னை பயமுறுத்திவிடும். நாங்கள் இறந்து பல கோடி ஆண்டுகள் ஆகிவிட்டன. எங்களின் எலும்புகள், பற்கள், படிமங்கள் மட்டுமே இப்போது இருக்கின்றன.






மித்ரா: ஓ... அப்படியா!

ரெக்ஸ்: எங்களின் அற்புதமான எலும்புக் கூடுகளையும், படிமங்களையும் (fossils) நீ அருங்காட்சியகங்களில் பார்க்கலாம்.

மித்ரா: சரி உலகிலே எங்கெங்கு அருங்காட்சியகங்கள் உள்ளன?




ரெக்ஸ்: அமெரிக்கா, சீனா, கனடா, ஜெர்மனி, ஜப்பான், இங்கிலாந்து, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் உள்ளன. இந்தியாவில் முதல் டைனோசர் அருங்காட்சியகம் மற்றும் புதைபடிவப் பூங்கா குஜராத்தில் உள்ளது. தமிழ்நாட்டில் அரியலூரில் டைனோசர் முட்டைகள் மற்றும் படிமங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.



www.worldtamilacademy.com

மித்ரா: நீங்கள் எந்தெந்தக் கண்டத்தில் வாழ்ந்தீர்கள்?



ரெக்ஸ்: நாங்கள் வெறும் ஒரு குறிப்பிட்ட கண்டத்தில் மட்டும் வாழவில்லை. நாங்கள் பூமியின் ஒவ்வொரு கண்டத்திலும், அது ஆசியாவாக இருந்தாலும் சரி, அமெரிக்காவாக இருந்தாலும் சரி, அல்லது பனிக்கட்டி நிறைந்த அண்டார்டிகாவாக இருந்தாலும் சரி, அங்குள்ள சுற்றுச்சூழலுக்கு ஏற்ப வாழ்ந்துள்ளோம்.



www.worldtamilacademy.com

மித்ரா: இது ரொம்பவே ஆச்சரியமா இருக்கு ரெக்ஸ்! சரி.. உங்க இனங்கள் எப்படி அழிந்தது?





ரெக்ஸ்: சற்று மெல்லிய குரலில் திடீரென்று ஒரு நாள், வானத்திலிருந்து ஒரு மிகப்பெரிய பாறை அதை விண்கல் என்று சொல்வார்கள் பூமியை நோக்கி மிக வேகமாக வந்து விழுந்தது. ஒரு பெரிய குண்டு வெடிப்பை விடப் பல லட்சம் மடங்கு சக்தி வாய்ந்தது அது!

மித்ரா: (வருத்தமாக) ஓ... எவ்வளவு பெரிய சோகம்! இது எல்லாம் ஒரு நாள்ல நடந்ததா?






ரெக்ஸ்: இல்லை. விண்கல் மோதல் ஒரு நிமிடத்தில் நடந்தாலும், அதன் பிறகு ஏற்பட்ட விளைவுகள் தூசி பரவுவது, வெப்பநிலை குறைவது, தாவரங்கள் அழிவது, விலங்குகள் பட்டினியால் சாவது இவை எல்லாம் சில ஆண்டுகள் வரை நீடித்திருந்தது. இதனால் எங்கள் இனம் மெது மெதுவாக அழிந்தது.

மித்ரா: ஓ... அப்படியா...!



ரெக்ஸ்: எங்கள் கதை முடிந்துவிட்டது. இப்போது இந்த பூமியைப் பாதுகாக்கும் பொறுப்பு உன்னைப் போன்ற சின்னஞ்சிறு குழந்தைகளுக்குத்தான். எங்கள் வரலாற்றைப் போலவே, இந்தப் பூமியையும் நீ அழகாகப் பாதுகாக்க வேண்டும்.


மித்ரா: சரி ரெக்ஸ், எனக்கு இவ்வளவு விஷயங்களைச் சொல்லிக் கொடுத்ததற்கு ரொம்ப நன்றி!





ரெக்ஸ்: எனக்கும் உன்னோடு பேசியது மகிழ்ச்சி, மித்ரா! என்று கூறியது. பின்பு இருவரும் அங்கிருந்து சென்றனர்.

மித்ரா: சரி ரெக்ஸ், எனக்கு இவ்வளவு விஷயங்களைச் சொல்லிக் கொடுத்ததற்கு ரொம்ப நன்றி!





அக்கா: மித்ரா.... மித்ரா என்று அழைக்கிறாள்.

மித்ரா: அய்யோ! இவ்வளவு நேரம் நான் கற்பனையில் ரெக்ஸிடம் பேசினேனா, கற்பனையே எவ்வளவு அழகாக இருக்கிறது. இதை உடனே அக்காவிடம் சொல்ல வேண்டும் என்று மகிழ்ச்சியில் ஓடினாள்.


www.worldtamilacademy.com



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com